# சின்ன வெங்காயத்தை சேமித்து விற்கவும்

உலகளவில் மொத்த சின்ன வெங்காய உற்பத்தியில் இந்தியாவும், இந்திய மாநிலங்களவில் தமிழ்நாடும் முன்னிலை வகிக்கிறது. சின்ன வெங்காயம் தமிழ்நாட்டிலிருந்து இலங்கை, இந்தோனேசியா, தாய்லாந்து, சிங்கப்பூர் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகியவை சின்ன வெங்காயம் சாகுபடி செய்யும் முக்கிய மாநிலங்களாகும். திண்டுக்கல், திருச்சி, திருப்பூர், பெரம்பலூர் மற்றும் மதுரை மாவட்டங்களிலிருந்து சந்தைக்கு சின்ன வெங்காய வரத்து உள்ளது. தற்போது, மைசூரிலிருந்து வரும் சின்ன வெங்காய வரத்து ஆகஸ்டு மாத இறுதி வரை இருக்கும். நவம்பர், 2015 வரை சின்ன வெங்காயத்தின் சந்தை விலை நிலையாக இருக்கும் பின்பு டிசம்பர் முதல் விலை குறைய துவங்கும். இதற்கு காரணம், பருவ மழையினால் சின்ன வெங்காய அறுவடையின் போது ஏற்படும் பயிர் சேதம் குறைவாக எதிர்பார்க்கப்படுவதினாலும் டிசம்பர், 2015 முதல் தமிழ்நாட்டில் விளாத்திகுளம் மற்றும் தேனி பகுதிகளிலிருந்தும் மற்றும் மைசூரிலிருந்து மீண்டும் புது வரத்து துவங்க உள்ளாதாலும் ஆகும்.

தற்போது நல்ல தரமான சின்ன வெங்காயத்தின் பண்ணை விலை, கிலோவிற்கு ரூ.25 –30 வரை திண்டுக்கல் சந்தையில் விற்கப்படுகிறது. பொதுவாக சின்ன வெங்காயம் கோடை பருவத்திலும் மற்றும் பருவ மழை பொறுத்து ஜூலை மாதத்தில் பயிரிடப்படுகிறது. இலங்கை மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளிலிருந்து ஏற்றுமதி தேவை வரும் செப்டம்பர் மாத மத்தியில் எதிர்பார்க்கப்படுகிறது.

விவசாயிகள் சந்தை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 17 ஆண்டுகளாக திண்டுக்கல் சந்தையில் நிலவிய சின்ன வெங்காயத்தின் பண்ணை விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும், வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் ஆய்வு செய்து, சந்தை ஆய்வுகளையும் மேற்கொண்டது.

ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், தரமான சின்ன வெங்காயத்தின் பண்ணை விலை அக்டோபர் - நவம்பர், 2015 மாதங்களில் கிலோவிற்கு ரூ.30 முதல் ரூ.33 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் சின்ன வெங்காயத்தை இருப்பு வைத்து அடுத்து வரும் அக்டோபர் - நவம்பர், 2015ல் விற்குமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

**<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள:</u>**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641003
தொலைபேசி :- 0422-2431405

**<u>தொழில் நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:</u>**

பேராசிரியர் மற்றும் தலைவர்
காய்கறிப் பயிர்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி எண் :- 0422-6611374, 0422-6611283